நிவாரணமாக ரூ.2,000/– மற்றும் மழை, வெள்ளம் போன்ற மீன்பிடித் தொழிலுக்குச் செல்ல இயலாத காலங்களில் ரூ.4,000/– எனக் கொடையளித்து, மீனவ மக்களின் மீனவ நண்பனாக விளங்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆறுகாட்டுத்துறை மீனவ மக்களின் நீண்ட நாள் கோரிக்கை மீன்பிடித் துறைமுகம் அமைக்க வேண்டும் என்பதாகும். என்னுடைய இந்தக் கேள்வி பேரவைக்கு வரும் முன்னரே மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கு ஆணையிட்ட மீனவ மக்களின் கலங்கரை விளக்கம் எங்கள் அம்மா, மீனவ மக்களின் பாதுகாவலர், எங்கள் தங்கம் அம்மா அவர்களின் பொற்பாதங்களில் (மேசையைத் தட்டும் ஒலி) கோடானு கோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகின்றேன். மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது தொகுதி மீனவ மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்து அமர்கின்றேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா வரிசை எண் 176, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.எச். சேகர், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

176—

மின்னணுவியல் நகரம்

***29150—திரு. சி.எச். சேகர்:**

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்மிடிப்பூண்டி தொகுதியில் மின்னணுவியல் நகரம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன், தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கும்மிடிப்பூண்டி தொகுதியில் மின்னணுவியல் நகரம் அமைக்க உத்தேசம் ஏதும் தற்போது இல்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.எச். சேகர் அவர்கள்.*

திரு. சி.எச். சேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருகிவரும் மின்னணுப் பொருட்களின் பயன்பாட்டால், அதன் மூலப்பொருட்களின் தேவைகள் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றன. இவை அதிகளவில் சைனா, இந்தோனேசியா, தைவான் மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. இதைக் கருத்தில்கொண்டு கடந்த 2008 ஆம் ஆண்டு கும்மிடிப்பூண்டி தாலுகாவிலுள்ள மாநல்லூர், சூரப்பூண்டி, சாணபுத்தூர் ஆகிய ஊராட்சிகளிலுள்ள 800 ஏக்கர் நிலங்கள் அரசிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. கடந்த ஆட்சியில்* ELCOT *நிறுவனத்தின்மூலம்* Electronic city *அமைக்க ஆலோசிக்கப்பட்டது. ஆகையால், இத்திட்டத்திற்குப் புத்துயிர் அளித்துச் செயல்படுத்திட அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனம்மூலம் சென்னை உட்பட எட்டு இடங்களில்* ELCOSEZ *நிறுவனங்கள் உருவாகியுள்ளன. தமிழகத்திலுள்ள தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த 1,780 நிறுவனங்கள்மூலம் சுமார் 3,90,000 பணியாளர்கள் நேரடியாகவும் 7,75,000 பணியாளர்கள் மறைமுகமாகவும் வேலைவாய்ப்பினைப் பெற்று வருகின்றார்கள். மேலும் 1,367.16 ஏக்கர் நிலப் பரப்பில் அமைக்கப்பட்டுள்ள 8* ELCOSEZ *நிறுவனங்களில் இதுவரை 543.25 ஏக்கர் நிலங்கள் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

மீதமுள்ள 458.71 ஏக்கர் நிலப்பரப்பில் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த நிறுவனங்கள் முழுமையாகப் பங்கேற்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

மேலும், சென்னை சோழிங்கநல்லூரில் 377.08 ஏக்கரில் அமைக்கப்பட்டுள்ள தகவல் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் இதுவரை 215 ஏக்கர் நிலம் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இன்னும் 92.36 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்ய தயார் நிலையில் உள்ளது. தகுதிவாய்ந்த தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் தொழில்முனைவோர்கள் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் அமைக்க முன்வருகின்றபட்சத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, உரிய முறையில் பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.எச். சேகர் அவர்கள்.

திரு. சி.எச். சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பாண்டில் நம் நாட்டில் மின்னணு இறக்குமதி மதிப்பு 200 யு.எஸ். பில்லியன் டாலராக உள்ளது. அது 2020 ஆம் ஆண்டில் 500 யு.எஸ். பில்லியன் டாலராக உயர வாய்ப்புள்ளது. உலகிலேயே சீனாவில்தான் மின்னணு உற்பத்தி குடிசைத் தொழிலாக வளர்ந்துள்ளது. கும்மிடிப்பூண்டியிலும் மின்னணு நகரம் அமைத்தால் சீனாவைப்போல தமிழகத்திலும் குடிசைத் தொழிலாக மின்னணுத் தொழில் வளர்ச்சி அடையும். இதனால் நம் நாட்டின் அன்னியச் செலாவணி குறையும். வட தமிழக இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பும் பெருகும் என்பதால், இந்தத் திட்டத்தை அரசு பரிசீலிக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

2014 ஜூலை 17]

மாண்புமிகு திரு. ந. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் இடத்தில் தகவல் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலம், ELCOSEZ தொடங்குவதற்கு, குறைந்தபட்சம் 25 ஏக்கர் நிலமும், அடிப்படை வசதிகள் மற்றும் உள்கட்டமைப்புகளுக்கு ரூபாய் முப்பது கோடியும் தேவைப்படுகின்றது. தகவல் தொழில்நுட்பத் துறையில் உலகளவில் ஏற்பட்டுள்ள மந்த நிலையின் காரணமாகத் தகவல் தொழில்நுட்பத் துறை நிறுவனங்கள், விரிவாக்கத்திற்குச் சுணக்கம் காட்டுகின்றன. கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் நிலத்தின் மதிப்பைப் பன்மடங்கு உயர்த்தியதனால், தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் சுணக்கம் காட்டியதைத் தொடர்ந்து, ஒருசில நிறுவனங்களுடன் நிகழ்த்திய கலந்தாய்வில், இரண்டாம் நிலை நகரங்களில் நிர்ணயிக்கப்பட்ட நிலத்தின் விலை அதிகமாக உள்ளதாகவும் கருதப்பட்டது. தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களை இயக்கும் வகையில், நிலத்தின் விலையை நிர்ணயம் செய்ய மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கும் கொண்டுச் செல்லப்பட்டு ஆய்வு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 177, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. தமிழ்ச்செல்வன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

177—

புதிய வட்டம்

***7498—திரு. இரா. தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர் தொகுதி, குன்னம் வட்டத்தை இரண்டாகப் பிரித்து செட்டிக்குளத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?